**தேயிலை ஆராய்ச்சி சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேயிலை ஆராய்ச்சி சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளமை.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கைக் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை

| | உரிய கணக்காய்வு நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து | காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது 2020 காலப்பகுதிக்குரிய வட்டி | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம |

| | | | |
|---|---|---|---|
| | உருவாகிய தேறிய கர்சுப் பாய்ச்சலை கணக்கீடு செய்யும் போது காசாக பெற்ற வட்டி வருமானம் ரூபா 782,970 இனால் குறைத்து சீராக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டிற்கான தேறிய இலாபம் / நட்டம் கணிப்பீடு செய்யும் போது கருத்திற் கொள்ளப்படாத காசு வெளிப்பாய்ச்ச லொன்றுக்கு அல்லது காசு உட்பாய்ச்ச லொன்றுக்கு காரணமாக அமையாத நிலையான சொத்துக்களில் ஏற்பட்ட குறைவான ரூபா 1,594,200 பெறுமதி மற்றும் நடப்பாண்டின் சொத்துக்களை மீள் மதிப்பீட்டு பெறுமதியான ரூபா 4,632,556 தொகையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 30 ஆம் பந்திக்கு முரணாக காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது. | வருமானமான ரூபா 6,786,688 ஆன தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் வட்டிப் பெறுவனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் காலப்பகுதிக்கு உரித்தற்ற வட்டி பெறுவனவான ரூபா 782,970 ஆன அளவானது காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்படு மூலதன மாற்றங்களின் கீழ் அட்டுறு வட்டி பெறுவனவுகளாக சீராக்கப்பட்டிருந்தது.<br><br>2021 ஆம் ஆண்டின் நிதிக் ற்றுக்களை தயாரிக்கும் போது காசாக பெறப்பட்ட வட்டியின் அளவு மற்றும் குறித்த காலப்பகுதிக்குரிய வட்டி வருமானம் ஆகியவை தனித்தனியாக காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலக்கம் 02 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முழுமையாக தேய்விடப்பட்ட ரூபா 6,815,000 பெறுமதியான புனித யோக்கிம் தோட்டத்திற்குரிய 05 வாகனங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்ட போதிலும் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 92(ஆ) பந்தியின் பிரகாரம் அது தொடர்பிலான வெளிப்படுத்தல்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இந்த சொத்துக்கள் தொடர்பிலான மதிப்பிடப்பட்ட வலு | முழுமையாக தேய்விடப்பட்டுள்ள தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் வாகனங்கள் தொடர்பில் கணக்குப் பதிவுகளின் மூலம் வெளிப்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் மீண்டும் மீள் மதிப்பீடு செய்யப்பட் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சொத்துக்களின் ஆயுட்காலத்தினை மீள மதிப்பீடு செய்து கணக்கு வைக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தப்பட்டு மீண்டும் நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 18 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் உயிரியல் சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும் தலவாக்கலை, இரத்தினபுரி, ஹந்தான, பசற மற்றும் கொட்டவ ஆகிய பிரதேச அலுவலகங்களில் காணப்பட்ட பெறுமதிமிக்க 5,654 மரங்கள் அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பலகை ரீதியான பெறுமதியுள்ள மரங்களின் வணிக பெறுமதியினை மதிப்பீடு செய்வதற்காக உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி தேவையான பணிகளை முன்னெடுத்த பின்னர் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உயிரியல் சொத்துக்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கு வைக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 1982 ஆம் ஆண்டின் போது தேயிலை தயாரிப்பிற்காக ரூபா 4,142,173 செலவிடப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரம் உரிய செயற்திட்டத்திற்கு பொருத்தமற்றது என்பதால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராததுடன் இந்த இயந்திரங்களின் பெறுமதி திறைசேரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் புத்தகங்களிலிருந்து | 2021.03.25 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சு மற்றும் 2021.07.07 ஆந் திகதி இடம்பெற்ற தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது வழங்கப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் இந்த செயற்திட்டத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டவைகள், கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் தொடர்பில் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி | பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்றத்தின் செயற்குழுவின் கட்டளைக்கமைய செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதிவழிக்குமாறு 2014 ஆம் ஆண்டின் போது பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்றத்தின் செயற்குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு பதிவழிக்காது இந்த இயந்திரங்களின் பெறுமதி நடைமுறை வேலைகளின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட நடைமுறை வேலைகளின் பெறுமதி மேற்படி அளவினால் நிதிக் கூற்றுக்களில் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | செலவினம் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியினை குறிப்பிட்டு அந்த செலவினங்களின் விபரங்கள் இல்லாதிருந்ததாக குறிப்பிட்டு பெருந்தோட்ட அமைச்சின் ஊடாக பொது திறைசேரியிலிருந்து இந்த செலவினத்தை பதிவழிப்பதற்கு அங்கீகாரம் கோரப்பட்டு கடிதம் ஒன்று 2021.08.05 ஆந் திகதி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பின்தொடர்தல் மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | |
| (ஆ) | இலங்கை தேயிலை சபைக்கு உரிய 08 வாகனங்கள் ரூபா 8,913,550 இற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்களின் உரித்து தேயிலை ஆராய்ச்சி சபைக்கு சுவீகரிக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே இது தொடர்பில் குறிப்புக்கள் மூலம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இலங்கை தேயிலை சபைக்குரிய 09 வாகனங்களில் இரு வாகனங்களின் உரித்து இதுவரையிலும் சுசவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 04 வாகனங்களின் உரித்தினை சுவீகரிப்பதற்காக CMT 52 விண்ணப்பம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய மூன்று வாகனங்களையும் பழுதுபார்ப்பதற்கு ஈடுபடுத்தியுள்ளதுடன், கழிவுப் புகை சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் உரித்தினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>எதிர்காலத்தில் உரித்து சாட்டுதல் செய்யப்பட்டிராத வாகனங்கள் தொடர்பில் கணக்கு குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களின் உரித்தினை துரிதமாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் ரூபா 6,749,688 தொகையான வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டிய ரூபா 1,619,925 ஆன வருமான வரித் தொகை கணக்கு வைக்கப்பட்டிராததுடன் புனித கூம்பஸ் தோட்டத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு விற்பனை செய்யப்படாது எஞ்சியிருந்த கழிவுத் தேயிலை 8,504 கிலோ கிராம்களுக்குரிய உரிய பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே 2019 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட மேற்குறித்த தோட்டத்திற்குரிய “Save the Children Project” செயற்திட்டத்தின் நிர்மாணங்களின் பெறுமதியான ரூபா 1,583,508 ஆன தொகை மூலதனமாக்குவதற்கு பதிலாக பூர்த்தி செய்யப்படாத பணியின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறப்பட்ட வட்டி வருமானத்தின் அடிப்படையில் வருமான வரி செலுத்துவதற்கு உரியது வருமான வரி செலுத்த வேண்டுமா என்பது தொடர்பில் காரணங்களை வினவி நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு கிடைக்கும் பதிலின் அடிப்படையில் மேல் பணிகள் முன்னெடுக்கப்படும். இதற்கு முன்னர் கழிவுத் தேயிலையின் இருப்பானது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பதுடன் 2021 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது கழிவுத் தேயிலையின் இருப்பினை பதிவு செய்தமையின் மூலம் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>Save the Childern செயற்திட்டத்திற்குரிய நடைமுறை வேலை கணக்கின் மீதி 2021 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் திட்டவட்டமாக இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் எடுப்பதற்கு அல்லது வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களின் கட்புல சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,381,613 பெறுமதியான புனித கூம்பஸ் தோட்டத்திற்குரிய I.S.O தரச்சான்றிதழ் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்குரிய உறுதிச்சீட்டுக்கள் மற்றும் பயன்பாட்டு ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க | புனித கூம்பஸ் தோட்டத்தின் ISO சான்றிதழ் 2014 ஆம் ஆண்டு காலாவதியாகியுள்ளதுடன் அதுவரையிலும் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,381,613 கிரயம் கடந்த வருடத்தின் சீராக்கமாக நிதிக்கூற்றுக்களின் இலாபத்திற்கு சீராக்கப்பட்டு அந்த கட்புல சொத்தின் பெறுமதியை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு 2021.03.25 ஆந் திகதி இடம்பெற்ற | ISO தர சான்றிதழ் மற்றும் அதற்குரிய பயன்பாட்டு ஆவணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வில்லை. | பெருந்தோட்ட அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.<br><br>இதுவரையிலும் ISO சான்றிதழை பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு உரிய சான்றுப்படுத்தல் கடித மற்றும் ஆவணங்கள் சபையின் பத்திரமொன்றின் ஊடாக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பின்னர் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தேயிலை ஆராய்ச்சி சபையின் வாகனங்களின் பெறுமதி ரூபா 72,132,125 ஆக காணப்பட்டதுடன் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலை பிரகாரம் அவற்றின் பெறுமதி ரூபா 71,760,591 ஆனமையால் ரூபா 371,534 ஆன இணங்காத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2015.01.01 ஆந் திகதியில் உள்ளபடியான குறித்த மீள் மதிப்பீட்டு பெறுமதிகள் 2018.12.31 ஆந் திகதியில் சீராக்கம் செய்வதற்கு நேர்ந்தமையால் வாகனங்களின் பேரேட்டுக் கணக்கின் ரூபா 371,543 அகற்றப்படாது காணப்பட்டமையால் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தலவாக்கலை வாகன உப பதிவேட்டின் மீதி மற்றும் பேரேட்டுக் கணக்கின் மீதி ஆகியவற்றுக்கு இடையே ரூபா 371,543 ஆன வேறுபாடொன்று காணப்படுகின்றது. இது 2021 ஆம் ஆண்டின் கணக்குகளின் ஊடாக திருத்தப்படும். | வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு | 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பகுப்பாய்வு பணிகளுக்காக பெற வேண்டிய வருமானம் தொடர்பில் உரிய | பெற வேண்டிய பணம் தாமதமின்றி அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | தோட்டங்களிலிருந்து பெற வேண்டிய பகுப்பாய்வு வருமானம் (Analytical Charges) ரூபா 1,033,905 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேவைகளை பெற்றுக் கொண்ட நிறுவனங்களிலிருந்து மீதி உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொண்டு மேலதிக கணக்கு வைத்தல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | புதித கூம்பஸ் தோட்டத்தின் நிதி நிலைமைக் கூற்றின் பெறுமதி ரூபா 1,960,497 ஆன நானாவித கடன் பட்டோரினுள் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை தேயிலை சபை ஆகிய நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 901,846 ஆன கூட்டுப்பெறுமதி 2011 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டவாறு காணப்பட்டதுடன் அவை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | தகவல் அலுவலகத்தினுள் இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக இந்த பணத்தை அறவிட முடியாத நிலைமையொன்று உருவாகியுள்ளது. இது தொடர்பில் தொடர்ந்தும் பரிசோதித்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களுக்கு அறிக்கையிடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய பணம் தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புனித கூம்பஸ் தோட்டத்தின் கடன் கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டிய மீதியில் 2010 ஆம் ஆண்டு முதல் வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,820,148 தொகையான கடன் மீதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த பழைய செலுத்த வேண்டிய கடன் மீதிகளை எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய தரப்பினருக்கு துரிதமாக தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது உரித்துக் கோரப்படாதெனின் அது தொடர்பில் உறுதிப்படுத்தி வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். |

**1.6.3 முற்பணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேயிலை ஆராய்ச்சி சபையினால் 2017, 2019 மற்றும் மீளாய்வாண்டின் போது பொருட்கள் மற்றும் சேவைகளை விநியோகித்தமைக்காக முற்பணமாக வெளிவாரி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 1,504,723 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணம் தொடர்பில் மீள ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2020 ஆம் ஆண்டிற்குரிய முற்பண கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்து 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணி நிறைவடைந்த துடன் உடனடியாக முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி.571(3) | 02 வருடங்களை கடந்த ரூபா 831,705 பிடி காசு தொடர்பில் நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 02 வருடங்களை விஞ்சிய பிடி காசு தொடர்பில் பொறியியல் பிரிவிற்கு மீள அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் பொறியியல் பிரிவிலிருந்து வழங்கப்படும் பணி சான்றுப்படுத்தல் சான்றிதழின் அடிப்படையில் பிடி காசினை விடுவிப்பதற்கு அல்லது வருமானமாக இனங்காண 2021 கணக்காண்டின் போது | தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது உரித்துக் கோரப்படாதுள்ளமை தொடர்பில் உறுதிப்படுத்தப்படின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் II அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | பதிற்கடமை வழங்கப்பட வேண்டியது நிரந்தர நியமனமொன்று வழங்கப்படும் வரை தற்காலிக அடிப்படையிலேயே ஆன போதிலும், சபையின் 04 சிரேஷ்ட கணக்காளர் பதவிகள் மற்றும் களஞ்சியப் பொறுப்பாளர் ஆகிய 02 பதவிகள் 04 ஆகியவற்றுக்காக 2 முதல் 8 வருடங்கள் வரை நிரந்தர நியமனம் ஒன்றை வழங்காது தற்காலிக பதிற்கடமை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 1,533,765 படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | இதுவரையிலும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவதற்காக எதிர்காலத்தில் அங்கீகாரம் கிடைத்த பின்னர் உரிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. | பதிற்கடமை நியமங்களுக்கு பதிலாக நிரந்தர நியமங்கள் வழங்கப்பட வேண்டும். |
| (இ) | பீஈடீ/12 ஆம் இலக்க மற்றும் 2003 ஜுன் 02 ஆம் திகதிய அரச பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | பணத்தை முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரின் மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான சபையினால் ரூபா 80,678,533 தற்காலிக வைப்புக்களில் முதலீடு செய்யும் போது அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிக்கொடை கொடுப்பனவுகளுக்காக 2008 ஆம் ஆண்டு வரையிலும் நடாத்திச் செல்லப்படும் நிதியங்கள் மற்றும் புனித ஜோக்கீம் தோட்டத்தின் வருமானங்களால் உருவாக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கு உரிய ரூபா 80,678,534 ஆன தொகை 2008 ஆம் ஆண்டின் போது மற்றும் 2013 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தினை பெற்று குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியினை முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரின் மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | பீஈடீ/12 ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 9.14 ஆம் பிரிவு | முகாமைத்துவத்திற்காக சட்டங்கள், விதிகளை உருவாக்குவதற்குரிய செயல்வழி கையேடொன்றினை தயாரித்து திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் கம்பனியினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அல்லது மேற்குறித்த பொது மாதிரி தொடர்பில் அல்லது அறிவுரை வழங்குமாறு பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு 2021.07.28 ஆந் திகதிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து தொலைபேசியில் மேற்கொண்ட விசாரணையின் பிரகாரம் எதிர்வரும் இரு வாரங்களினுள் உரிய பொது மாதிரியை வெளிப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் தேயிலை ஆராய்ச்சி சபையின் உரிய அங்கீகாரத்தினை பெற்று மேற்படி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | 6.5.1 ஆம் பிரிவு | நிதிக்கூற்றுக்களுடன் ஆண்டறிக்கையின் வரைபொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் வரைபொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நிதிக்கூற்றுக்களுடன்ஆண்டறிக்கையின் வரைபொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு 2021 | நிதிக்கூற்றுக்களுடன் ஆண்டறிக்கையின் வரைபினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். |

ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 48,058,726 ஆன பற்றக்குறை ஆனதுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 151,170,276 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 103,111,550 ஆன பற்றாக்குறையிலான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. புனித ஜோக்கின் தோட்டத்தின் மற்றும் புனித கூம்பஸ் தோட்டத்தின் கடந்த வருடத்திற்கு ஒப்பாக ரூபா 32,816,911 ஆன பற்றாக்குறை காணப்பட்டமையும், நிர்வாகச் செலவினம் ரூபா 92,575,248 இனால் குறைவடைந்தமையும் இந்த நிலைமைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 நவம்பர் 24 ஆந் திகதி ரூபா 14,030,854 செலவிடப்பட்டு இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட (Walk in type Environmental Facility) எனும் பெயருடைய உபகரணம் மூன்று வருடங்கள் கடந்திருந்த போதிலும், அந்த உபகரணத்தின் நிறுவுதல், ஒப்படைத்தல் மற்றும் செயற்பாடு எதிர்பார்த்த மட்டத்தில் காணப்படாமையின் அடிப்படையில் ஆராய்ச்சிகளுக்கு பயன்படுத்த முடியாததாக காணப்பட்டது. | இந்த உபகரணத்தை கொள்வனவு செய்த கம்பனிக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக வழக்கு தொடருவதற்கு உரிய பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த கோவைக்கு பொறுப்பாக செயற்படும் அரச உயர் நீதிபதி மைத்ரி அமரசிங்க அவர்களிடம் வினவிய போது அவர் கூறியதாவது அந்த முறைப்பாடு தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது எனவும் அதனை நிறுவனத்தின் பணிப்பாளருக்கு சமர்ப்பித்த பின்னர் கூடியளவு விரைவாக நுவரெலியா அரச சட்ட வல்லுனர்கள் மூலம் நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடருமாறு குறிப்பிடப்பட்டள்ளது என்பது ஆகும். | சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்தி நட்டத்தினை அறவிட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் 2019 ஆம் ஆண்டின் ரூபா 13,453,726 ஆக காணப்பட்ட வங்கி மேலதிகப் பற்று மீதி மீளாய்வாண்டின் போது ரூபா 30,611,962 வரை அதிகரித்திருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது சபைக்கு செலுத்துவதற்கு நேர்ந்திருந்த வட்டி செலவினம் ரூபா 1,459,726 ஆகும். | தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் காசுப் புத்தகத்தின் பிரகாரம் இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையின் ரூபா 16,352,742 ஆன வங்கி மேலதிகப் பற்று காண்பிக்கப்பட்ட போதிலும் இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையின் நடைமுறைக் கணக்குடன் தொடர்புபட்ட நிதிய முகாமைத்துவ சேமிப்பு கணக்கொன்று (Call Deposit ஆக) பேணிச் செல்லப்பட்டுள்ளமையால் நடைமுறைக் கணக்கிற்கு சமர்ப்பிக்கப்படும் காசோலைகளுக்காக அந்த வைப்புக் கணக்கிலிருந்து பணம் பெற்றுக் கொள்ளப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். | நிறுவனத்திற்கு நலன் ஏற்படும் விதத்தில் நிதி முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | வாகல்தூவ, தெனியாய மற்றும் கொட்டவா பிரதேச அலுவலகங்களில் 2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் ரூபா 72,031,804 செலவிடப்பட்டு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணிகளின் உரித்தினை சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன்தூவ காணி அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்குரிய காணியாவதுடன் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு உரித்தாகவுள்ள பகுதியினை சுவீகரிப்பதற்கு பெருந்தோட்ட அமைச்சின் கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>தெனியாய காணி தலவாக்கலை தோட்டக் கம்பனிக்கு சொந்தமாக காணப்படுவதுடன் உரித்துக்கானகோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் உரிய தோட்டக் கம்பனியுடன் எதிர்காலத்தில் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | குறித்த காணிகளின் உரித்தினை சபைக்கு கோருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொட்டாவ காணி 30 வருட காலமாக நீண்ட குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக காலி யக்கலமுல்ல பிரதேச செயலகத்தில் குத்தகை உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தலின் அடிப்படையில் தேயிலை ஆராய்ச்சி சபையின் தற்போதைய தலைவரின் கையொப்பத்துடன் உரிய கொள்கைப் பிரமாணம் அந்த அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | முழுமையான சம்பளத்துடனான வெளிநாட்டு கல்வி விடுப்பினை பெற்று வெளிநாடு சென்று மீள சேவைக்கு வருகை தராத 04 உத்தியோகத்தர்கள் 2005 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் போது சபையுடன் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கை மீறப்பட்டதால் குறித்த பிணை முறி பெறுமதியான ரூபா 15,054,891 தொகையை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீள அறவிட முடியாதிருந்தது. | பிணை முறை ஒப்பந்தத்தை மீறி மீள சேவைக்கு வருகை தராத 04 உத்தியோகத்தர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. தற்போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக கல்வி விடுப்புக்களை பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்கள் கையொப்பமிடும் பிணை முறி உடன்படிக்கைகள் முறையாகவும் கிரமமாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. | சட்ட நடவடிக்கைகள் தாமதப்படுதல் வேண்டுமென்றே இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பில் விசாரணை யொன்றின் மூலம் உறுதி செய்து பொருத்தமான நடவடிக்கை எடுத்தல், உத்தியோகத்தர் கள் தொடர்பில் தகவல்கள் தேடிக் கண்டறிதல் ஆகியவற்றுக்கு எடுக்கக் கூடிய மாற்று நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்துதல். |
| (ஈ) | புனித கோமபஸ் தோட்டத்தின் உள்ளக கட்டுப்பாட்டு நலிவுகள் காரணமாக 2017 ஆம் ஆண்டின் போது ஏற்பட்டிருந்த நிதி மோசடி காரணமாக இழக்கப்பட்ட தொகை ரூபா 10,300,169 கடன்பட்டோர் மீதியினுள் காணப்படுகின்ற போதிலும் மீளாய்வாண்டின் இறுதி | புனித கூம்பஸ் தோட்டத்தின் தேயிலை விற்பனை நிலையத்தில் தேயிலை விற்பனையின் போது ஏற்பட்ட ரூபா 7,073,432 ஆன நிதி மோசடி மற்றும் புனிய கூம்பஸ் தோட்ட அலுவலகத்தின் நடைமுறை வங்கி கணக்குகளில் இடம்பெற்றிருந்த ரூபா 5,207,571 ஆன பண வைப்புக்கள் தொடர்பிலான | நிதி மோசடி தொடர்பில் முறையான விசாரணை மற்றும் ஒழுக்காற்று விசாரணை தாமதமின்றி நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் விசாரணை பணிகள் நிறைவு செய்யப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு தவறியுள்ளது. | மோசடிகள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. நிர்வாகப் பிரிவினால் இந்தப் பணிகள் தொடர்பில் பின்தொடர்தல் இடம்பெறுகின்றது. | வேண்டும். |
| (உ) | தேயிலை ஆராய்ச்சி சபைக்குரிய 02 வாகனங்களுக்காக வாகன பதிவு முதல் பிரதி சபைக்கு சொந்தமாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் ஹந்தான உப அலுவலகத்தில் கை உழவு இயந்திரமொன்று (2 Wheel Hand Tractor with Tailor) பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது 2020 ஆம் ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக சொத்துக்களின் பரிசோதனையின் போது இனங்காணப்பட்டிருந்தது. | வாகன பதிவு சான்றிதழின் மூலப்பிரதி தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.<br><br>• இலக்கம் 32-1806, ஹந்தான உப மத்திய நிலையத்திற்குரிய இந்த கை உழவு இயந்திரம் சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கிடைத்துள்ளது. இது தொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்திடம் கோரி பதிவு செய்வதற்குரிய பணிகள் முன்னெடுக்கப்படும். | சபைக்குரிய வாகனங்களின் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை பெற்றுக் கொள்ள துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புனித ஜோக்கீம் தோட்டத்தின் 2015 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் மூலதன செலவினமாக மீன் பயிர்ச் செய்கைக்கு செலவிடப்பட்ட தொகை முறையே ரூபா 9,242,229, ரூபா 1,822,004, ரூபா 1,325,706, ரூபா 655,369, ரூபா 21,000 மற்றும் ரூபா 283,187 எனுமாறு குறைவாக காண்பிக்கப்படுகின்ற மையால் மீன் பயிர்ச் செய்கைக்கு | மூலதன ஏற்பாடுகள் இல்லாதிருந்தமை காரணமாக மீள பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் பல வருடங்களின் பின்னர் மேற்கொள்ள முடியாதிருந்தது. தொழில்சாலையின் இயந்திரங்களில் நிலவிய குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரை மற்றும் செயற்படு மூலதன பற்றாக்குறையின் அடிப்படையில் தொழிற்சாலையின் நட்டத்தினை குறைப்பதற்காக குறைவான இயலளவுடன் | மீன் பயிர்ச் செய்கை மற்றும் வெற்றுக் காணிகளை பயிர் செய்வதற்குரிய மூலதன நிதியேற்பாட்டினை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபடுத்துவதில் குறைவான போக்கு அவதானிக்கப்பட்டதுடன் இந்த நிலைமை நேரடியாக பயிர்ச் செய்கையின் விளைச்சல் குறைவடைதல் தொடர்பிலும் தாக்கமளித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் வருடாந்தம் பூர்த்தி தேயிலை 1,020,000 கிலோகிராம் கொள்ளளவுடைய ஒட்டுமொத்த கைத்தொழில்சாலை கடந்த வருடத்தில் மற்றும் மீளாய்வாண்டின் போது இந்த கொள்ளவின் 22 முதல் 85 சதவீதம் வரை குறைவான இயலளவுடன் காணப்பட்டமை இந்த நிலைமைக்கு காரணமாகியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | நடைமுறைப் படுத்துவதற்கு நிறப்பிரிகை இயந்திரத்தினை நிறுவி அதன் மூலம் கிடைக்கும் விலையின் அடிப்படையில் இயலளவினை அதிகரிப்பதற்கும் தோட்டம் தொடர்பிலான மதியுரைக் குழு பரிந்துரை செய்துள்ளது. பூர்த்தி தேயிலையின் தரத்தினை அதிகரிப்பதற்கு உரிய நிறப்பிரிகை இயந்திரம் தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் தோட்டத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் கைத்தொழிற்சாலையினை உச்ச அளவில் நடாத்திச் செல்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. புதின ஜோக்கீம் தோட்டத்தினை அபிவிருத்தி செய்வதற்காக தற்போது பெருந்தோட்ட அமைச்சிடமிருந்து 2021 ஆம் ஆண்டிற்காக 50 மில்லியனான நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கடும் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் 103 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் இடையே 34 செயற்திட்டங்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 69 செயற்திட்டங்களின் செயன் முன்னேற்றம் 2 முதல் 95 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த | ஆராய்ச்சி செயற்திட்டங்கள் அனைத்தும் நீண்டகால ஆராய்ச்சிக்கு உரியவை ஆகும். அதனால் செயற்திட்டங்களுக்குரிய ஆராய்ச்சி நடவடிக்கைகள் பல வருடங்களாக மேற்கொள்ளப் படுகின்றது.<br><br>2013-2017 நிறுவன திட்டத்தின் பிரகாரம் தேயிலை தொழிற்சாலையின் தரப்பினரின் பங்களிப்புடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் 38 அபிவிருத்தி செயற்திட்டங்களை காலம்தாழ்த்துவதற்கு தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் எடுத்த சில தீர்மானங்களாவது<br>i. விஞ்ஞான மதியுரை குழுவின் (Scientific | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காணப்படும் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் ஆராய்ச்சி செயற்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்து ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்களின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆராய்ச்சி செயற்திட்டங்கள் இடையே தேயிலைத் துறையின் நிபுணத்துவம் கொண்ட மனித வளத்தின் பற்றாக்குறை காரணமாக 2019 ஆம் ஆண்டளவில் 10 ஆராய்ச்சி செயற் திட்டங்களும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் ரூபா 40,891,685 செலவிடப்பட்ட 28 ஆராய்ச்சி செயற்திட்டங்களும் பிற்போடப்பட்டு அல்லது கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | Advisory Committee – SAC) மற்றும்<br>ii. ஆராய்ச்சி தொடர்பான மதியுரை குழுவின் (Consultative Committee on research – CCR) பரிந்துரையின் அடிப்படையில் காலரீதியான தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு மேற்கொள்ளல்.<br><br>நிறுவனத்தின் கட்டுப்பாடின்றி காணப்படும் பொருத்தமான மனித வளம் இல்லாதிருந்தமை காரணத்தால் இந்த செயற்திட்டத்தை பிற்போடுவதற்கு நேர்ந்துள்ளது.<br><br>எவ்வாறான போதிலும் அந்த தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு தேயிலை ஆராய்ச்சி சபை மற்றும் ஆராய்ச்சி தொடர்பான மதியுரை குழுவின் அறிவுரையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட சில செயற்திட்டங்கள் பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் சேர்ந்து 2020/21 ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்டது. | |
| (இ) | தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தெனியாய, ஹந்தான, கொட்டவ மற்றும் பசற ஆகிய பிரதேச அலுவலகங்களில் நடாத்திச் செல்லப்படும் தேயிலை நாற்று மேடைகளில் மீளாய்வாண்டின் போது காணப்பட்ட மொத்த கன்றுகளின் எண்ணிக்கையில் அதாவது 175,286 இல் 2,899,177 பெறுமதியான 11,608 கன்றுகள் ஆண்டு இறுதியில் விற்பனை செய்யப்படாது எஞ்சியிருந்தமை | தேயிலை நாற்று மேடைகளில் தேயிலை கிளைகளை நாட்டுதல் இடம்பெறுவது நாற்று வருடத்திற்கு (Nursery Calendar) இன் பிரகாரம் மற்றும் வலயத்தின் அடிப்படையில் வருடத்தின் பல்வேறு காலப்பகுதிகளில் (தாழ்நாட்டு – யூலை முதல் செப்தெம்பர், ஊவா – செப்தெம்பர் முதல் நவம்பர்) ஆகும். பொதுவாக தரமான தேயிலை கன்றொன்றினை பெற்றுக் கொள்ள 9 முதல் 12 மாதங்கள் வரையான காலம் எடுக்கும் அதனால் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் | தேயிலை நாற்று மேடைகளில் கன்றுகளை விற்பனை செய்யப்படுவதை அதிகரித்துக் கொள்வதற்காக மூலோபாய நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப் படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அவதானிக்கப்பட்டதுடன் அது மொத்த கன்றுகளின் எண்ணிக்கையில் 64 சதவீதம் ஆகும். கன்றொன்றுக்காக மேற்கொள்ளப்படும் செலவினமும் ரூபா 17.15 இல் இருந்து ரூபா 29.54 வரை விலகலடைந்துள்ளது. | தேயிலை நாற்றுமேடையில் கருத்திற் கொள்ளக் கூடிய அளவிலான தேயிலை கன்றுகளின் எண்ணிக்கை சராசரியாக காணப்படும். மேலும் தாய்த் தாவர செயற்திட்டம் மற்றும் ஆராய்ச்சி தேவைப்பாடுகளுக்காக தேயிலை கன்றுகள் இருப்பில் வைத்திருக்கப்படும். தேயிலைக் கன்று நாற்று மேடைக்காக செலவிடப்படும் நாற்றுமேடை மற்றும் மண் தயார்ப்படுத்தும் செலவினம், தொழிலாளர் கூலி ஆகியவற்றுக்காக செலவிடுதல் மாற்றமடைவதால் ஒரே நிலையத்திலேயே ஒவ்வொரு வருடமும் அலகு விலையில் விலகல்கள் இடம்பெறும். | |

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முழுமையாக நிறைவு செய்யப்படாத ரூபா 2,585,000 தொகையான 17 பெறுகை நடவடிக்கைகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | பெறுகை நிகழ்ச்சித் திட்டத்தின் செயலாற்றல் திருத்தப்பட வேண்டும். | நடைமுறைக்கு சாத்தியமான முறையில் அமுல்படுத்தக் கூடிய திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியுள் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகள் 36 நிலவிய போதும் அவற்றுள் 26 வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ்வாறே சிரேஷ்ட கல்வி மற்றும் ஆராய்ச்சி பதவிகளில் 13 வெற்றிடங்கள் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் | சிரேஷ்ட முகாமையாளர் பதவிகள் 36 இன் 26 அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் உள்ளக பதவியுயர்வு வழங்கப்படுவதால் தகைமைகளை பூர்த்தி செய்த உள்ளக விண்ணப்பதாரர்கள் காணப்படாமையால் அந்த வெற்றிடங்களை நிரப்ப முடியாது உள்ளது. பிரதி பணிப்பாளர் (செயற்திட்டம்), | வெற்றிடம் நிலவுகின்ற அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் அத்தியாவசிய பணிகளை துரிதமாக இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். 2014 ஆம் |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்பமல்லாத முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் 60 வெற்றிடங்களும் நிலவின. மேலும் 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் தற்காலிகமாக அல்லது அமைய அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த 180 நாட்களை விஞ்சிய 98 ஊழியர்கள் 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதி முதல் அமுலாகும் வரையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபையின் பதவியணிக்கு உள்ளடக்குவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பிரதி பணிப்பாளர் ஆராய்ச்சி (உற்பத்தி மற்றும் தொழில்நுட்பம்) பதவிகளை நிரப்புவதற்கு சபையின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலதிக பணிப்பாளர் பதவிக்காக நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே ஆராய்ச்சி மற்றும் செயற்திட்ட உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்குரிய பத்திரிகை அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 201 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள நிரந்தர நியமனத்தை சட்டரீதியாக்குவதற்கு அங்கீகாரத்தினை கோரியிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு இதுவரை அனுமதி கிடைத்திருக்கவில்லை<br><br>தற்போது மரணமடைந்தமை, சேவையிலிருந்து ஓய்வு பெற்றமை போன்ற காரணங்களின் அடிப்படையில் PL1 தொகுதியின் 29 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் அவற்றை வெற்றிடங்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு உரிய அங்கீகாரத்தினை பெருந்தோட்ட அமைச்சின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. | ஆண்டின் போது நியமனங்களை வழங்கிய ஊழியர்களை பதவியணியில் உள்ளடக்குவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் (OIC) பதவி இல்லாதிருந்த போதிலும் அந்த பதவிகளின் பதிற் கடமைகளுக்காக 07 உத்தியோகத்தர் | நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் (OIC) பதவி நிரந்தரமான பதவியல்ல என்பதுடன் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் காணப்படவில்லை. எவ்வாறான போதிலும் 06 பிரதேச மத்திய | அங்கீகரிக்கப் படாத எந்தவொரு பதவிக்காகவும் நியமங்கள் வழங்கப்படக் கூடாது. |

| | | |
| --- | --- | --- |
| நியமிக்கப்பட்டு பதிற் கடமை பணிகளாக மீளாய்வாண்டினுள் ரூபா 360,000 செலவிடப்பட்டிருந்ததுடன் இதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரை செலவிடப்பட்டுள்ள மொத்த தொகை ரூபா 3,713,802 ஆகும். | நிலையங்களில் நிர்வாக மற்றும் நிதி ரீதியான பணிகள் முறைமைப்படுத்துவதற்காக அந்த மத்திய நிலையங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டு சேவையில் ஈடுபெறும் சிரேஷ்ட ஆராய்ச்சியாளர் அல்லது மதியுரை உத்தியோகத்தர்களை கொண்டு அந்த பணிகளை நிறைவேற்றுவதுடன் குறித்த மத்திய நிலையத்தில் 24 மணித்தியாலமும் கடமைகளை நிறைவேற்றும் பொறுப்புக்களுக்கு கடப்பட்டுள்ளமையால் அதற்காக ரூபா 5,000 ஆன மாதாந்த கொடுப்பனவொன்று தேயிலை ஆராய்ச்சி சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்படுகின்றது. | |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை அச்சிடுவதற்காக 2021.07.28 ஆந் திகதி பெருந்தோட்ட அமைச்சின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அந்த அறிக்கையினை அச்சிடும் பணிகளை மேற்கொள்வதற்காக அச்சகத்திற்கு உரிய பிரதி கையளிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் ஆங்கிலப் பிரதியின் முதல் வரைபு தற்போது அச்சகத்திலிருந்து எமக்கு கிடைத்துள்ளதுடன் 2019 சிங்களம் மற்றும் தமிழ் பிரதிகளின் பக்கங்களை ஒழுங்குபடுத்தும் பணிகள் இடம்பெறுகின்றன. | பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 17 செலவின விடயங்களின் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடான ரூபா 116,668,160 தொகையினை விஞ்சி ரூபா 123,016,573 அதாவது 105 சதவீதம் அதிகமாக செலவினம் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் 16 செலவின விடயங்களின் மொத்த நிதியேற்பாடான ரூபா 35,997,000 தொகை 50 சதவீதத்தை விட குறைவாக அதாவது ரூபா 5,113,435 மாத்திரம் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிராத போது செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்களைப் போன்றே நிதியேற்பாடுகளிலிருந்து எதுவித பயன்பாடும் மேற்கொள்ளப்படாது மொத்த நிதியேற்பாடும் அதாவது ரூபா 13,800,000 தொகை எஞ்சிய சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டது. அதற்கமைய பாதீடானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நிறுவனத்தின் அத்தியாவசியமான பணிகளை மேற்கொள்வதற்கு இடம்பெற்றமையால் நிதியேற்பாடுகளை விஞ்சி செலவினம் மேற்கொள்வதற்கு நேர்ந்துள்ளது. மேலும் ஏனைய வருடங்களின் வருடாந்த பாதீடுகள் தயாரிக்கப்பட்ட போதிலும் 2020 ஆம் ஆண்டின் செலவினத் தலைப்பானது காலாண்டு ரீதியாகவே தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் 2020 ஆம் ஆண்டின் இறுதி பகுதியில் முழு ஆண்டிற்குமான பாதீடு தயாரிக்கப்பட்டதுடன் அதன் போது நிதியேற்பாட்டினை விஞ்சி உயர்ந்த அளவில் செலவினங்கள் அறிக்கையிடப்பட்டன. மேலும், மூலதன உருப்படிகளுக்காக செலவிடுவதற்கு நேர்ந்துள்ளது கடந்த வருடத்தின் பாதீட்டினுள் மற்றும் செயற்திட்டங்களின் நிதியில் ஆகும்.<br><br>கொவிட் - 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக விதிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் சட்டம், ஊரடங்குச் சட்டம் போன்ற காரணங்களால் நிதியேற்பாடு 50 சதவீதத்தினை விட எஞ்சியிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.<br><br>நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாதுள்ள போது 2019 ஆம் ஆண்டிற்குரிய மூன்று காப்புறுதி கொடுப்பனவுகள் 2020 ஆம் ஆண்டினுள் செலுத்தப்பட்டுள்ளது. மொத்த நிதியேற்பாட்டின் சேமிப்புக்கள் 2021 ஆம் ஆண்டிற்கு முன்கொண்டு செல்லப்பட்டது. | பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட வேண்டும். |

4.3 **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான "2030 நிகழ்ச்சி நிரல்" பிரகாரம் தேயிலை ஆராய்ச்சி சபையினால் தமது விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படும் பணிகள் தொடர்பில் நிலைபேறான இலக்குகள் மற்றும் அவற்றின் செயன்முன்னேற்றத்தை அளவிடும் குறிகாட்டிகள் மற்றும் வருடாந்த அடைவுகள் இனங்காணப்பட்டு அந்த பணிகள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு செயல் திட்டங்களுக்காகவும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (Sustainable Development Goals - SDG) இலக்கங்கள் உள்ளடக்கப்பட்டு அதனுடன் இணைந்த பணிகள் இடம்பெறுகின்றன. மேலும் 2021 ஆம் ஆண்டின் போது தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (Sustainable Development Goals - SDG) இலக்கங்களுக்கு மேலதிகமாக சுபீட்சத்தின் நோக்கு (Vistas of Prosperity – VP) மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் மூலோபாயத் திட்டத்தின் (Ministry of Plantation Strategic Plan – MP SP) (2021-2025) உரிய இலக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | 2007 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின்படி செயற்பட வேண்டும். |